# தேசிய தொலைத்தொடர்புக் கொள்கை 2011

தேசிய தொலைத்தொடர்புக் கொள்கை 2011ன் நகலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் கருத்துக்களும் வரவேற்கப்பட்டுள்ளன. பாதுகாப்பான, நம்பகத்தன்மையுள்ள, கட்டுப்படியான, உயர்தர, ஒருங்கிணைக்கப்பட்ட தொலைத்தொடர்பு சேவைதனை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தருவதை கொள்கை அறிக்கை நோக்கமாக அறிவிக்கிறது

'அனைத்தும் ஆன்லைனில்' என்ற பெரும் வர்த்தக நோக்கில் கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வெளிப்படையான தகவல் உலகை கட்டியமைக்கப்போவதாக அறிக்கை பேசுகிறது. தேவைப்படும் தொழில்நுட்பங்களை இறக்குமதி செய்வதால் 300 கோடி பில்லியன் டாலர் செலவு என கவலைப்படும் அறிக்கை உள்நாட்டு தொலைத்தொடர்பு உற்பத்திக்கு முன்னுரிமை என பேசுகிறது.

மொபைல்- செல்பேசி வைத்திருப்பவரை அதிகாரப்படுத்துவது என்ற நோக்கில் கொள்கை திசைவழி அமையும் என்கின்றனர். அகலகற்றை இணைப்பு (Broadband) என்பது வளர்ந்து வருகிறது. அலைகற்றை (Spectrum) பிரித்தளிப்பதும், தேர்ந்த முறையில் அதனை பயன்படுத்துவதும் மாபெரும் சவால் என்பதை ஏற்கிறது அறிக்கை. மொபைல்- தொலைகாட்சி-கணிப்பொறி மூன்றின் ஒருமிப்பு சாரசரி இந்தியனுக்கு கிடைப்பது குறித்து அறிக்கை உரத்து பேசுகிறது. குரல், காணொளி, தகவல் என்ற மும்முனைகளுக்கும் அகலகற்றையின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

மென்பொருள் துறையில் தலையாய இடத்தை இந்தியா பிடித்துள்ளது. சைபர் செக்யூரிட்டி வளர்ச்சி பெருமளவு வளர வேண்டிய தேவையை வற்புறுத்துகிறது அறிக்கை. மின் ஆளுமை- மொபைல் ஆளுமை(E-Governance, M-Governance) என மாபெரும் திறப்புகளை நாடு காணவேண்டும்.

பொதுத்துறைகளை அதன் ஊரக–பின்னடைந்த-மலைப் பகுதிகளின் சேவைக்காக பாராட்டும் அறிக்கை, அதன் தொடர்ந்த பங்கு பாத்திரம் குறித்த உத்தரவாதத்தை தருகிறது. பாதுகாப்பு மற்றும் கேந்திர பணிகளுக்காகவது பொதுத்துறைகள் நீடிக்கும் என அறிக்கை கருதுகிறது.

இதற்கு முன்னர் வாஜ்பாய் காலத்தில் வெளியான 1999 அறிக்கையின் பங்களிப்பை பட்டியலிடுகிறது 2011 அறிக்கை. தொலைத்தொடர்பு அடர்த்தி 2.3 சதத்திலிருந்து 74 சதமாக உயர்ந்தது, 97 சத கிராமங்களுக்கு சேவை சென்றடைந்தது, கடுமையான கட்டண வீழ்ச்சி ஆகியன 1999 அறிக்கையின் சாதனைகளாக சொல்லப்பட்டுள்ளன.

.

இன்றுள்ள 35 சத ஊரக அடர்த்தியை 60 சதமாக 2017க்குள்ளும், 100 சதமாக 2020க்குள்ளும் உயர்த்துவது நோக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கேட்டவுடன் அகலக்கற்றை இணைப்பு 2015க்குள்ளும், 2017ல் 17.5 கோடியும், 2020ல் 60 கோடி இணைப்புகளும் இலக்காக கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு தேசம்- ஓர் உரிமம் அடிப்படையில் ரோமிங் பிரச்ச்சனையே இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அலைக்கற்றை பயன்பாடு குறித்து முறையான தணிக்கை முறை உருவாக்கப்படும். வாடிக்கையாளர் குறைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்குரிய முறைகள் வலுப்பெறும், 2020க்குள் ஐபி6 தொழில்நுட்பம் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பஞ்சாயத்துவரை கண்ணாடி இழை கேபிள் போடப்படும். பொதுத்துறைகள் ஒன்றுக்கொன்று இணைந்து பணியாற்றும் திறன் அதிகரிக்கப்படும். புதிய ஒருங்கிணைந்த உரிமம் முறை அமுலாகும். அலைக்கற்றை சந்தை விலைக்கு மட்டுமே கிடைக்கும். பெற்ற உரிமத்தை வேண்டாம் என விட்டு வெளியேறிட வாய்ப்பு உருவாக்கப்படும். இந்தியாவில் தயாராகும் சிம் கார்டுகள் மட்டுமே பயன்பாட்டிற்கு இருக்கும் வகையில் தொழில்நுட்ப வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

தொழில்முனைவோர், அறிவுத்துறையினர் ஒருங்கிணைப்பு தயாரிப்பு உற்பத்தியில் வலுப்பெறும். இந்தியப் பொருட்கள் தயாரிப்பாளர்களுக்கு நிதிவசதி செய்து தரப்படும். தனியாக தொலைத்தொடர்பு நிதி கார்ப்பரேஷன் உருவாக்கப்படும்.

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், இந்திய டெலிகிராப் சட்டம் ஆகியவற்றில் மேற்கூறிய கொள்கைகளுக்கு ஏற்ற வகையில் உரிய மாற்றம் செய்யப்படும் என்ற அறிவிப்பும் கொள்கை அறிக்கையில் காணப்படுகிறது.

ஏராள கனவுகளை வெளிப்படுத்தும் கொள்கை அறிக்கை குறித்து நாடு தழுவிய விவாதம் நடந்து வருகிறது. நவீன தாராளமய கொள்கைகளின் பாய்ச்சலாகவே 2011 அறிக்கை வந்துள்ளது. நாடு முழுமையிலும் தங்கு தடையற்ற மார்க்கெட்டை பெரும் முதலாளிகளுக்கு உருவாக்குவதுதான் அடிச்சரடாக உள்ளது. தனியார் மூலதனப் பெருக்கம்- தனியார் சேவை விரிவாக்கம்- தனியார் இலாபக் குவிப்பு என்பதற்கு தடையில்லாத பாதையை 2011 அறிக்கை போட விரும்புகிறது. இதற்கு முன்பு அமுலாக்கப்பட்ட 1994 மற்றும் 1999 கொள்கை அறிவிப்புகள் தனியார் நுழைவை துவக்கி வைத்து வலுப்படுத்தின. அரசுத்துறை-பொதுத்துறை பங்களிப்பின் வேகத்தை மட்டுப்படுத்தின.

1999க்குப்பின் அரசாங்கம் நேரிடையாக சேவை தருவதிலிருந்து விலகியது. பி எஸ் என் எல்(BSNL) கம்பனியை உருவாக்கியது. துவங்கிய 6 ஆண்டுகளில் 40000 கோடிக்கு 2006லேயே வருவாய் ஈட்டி உச்ச இலாபம் 10000 கோடியை தொட்ட பி எஸ் என் எல் கம்பனி, நட்டம் நோக்கி நகரத்துவங்கி விட்டது. அப்போது ஏர்டெல் 18000 கோடி வருவாயில்தான் இருந்தது. ஆனால் தற்போது தனியார்களின் வருவாய் பெருகி இலாபமும் அதிகரிக்க துவங்கிவிட்டது. அவர்கள் வளர்ச்சிக்கு இந்திய மக்கள் பணமும் நீண்டகால கடனாக வங்கி மூலம் வழங்கப்படுகிறது. கடன்- மூலதனம் விகிதத்தை உரிய வகையில் பயன்படுத்தி தனியார் பெரும் வெற்றியை பெற்றுவிட்டனர்.

தொலைத்தொடர்பு பொதுத்துறைகள் சொந்த சேமிப்பிலிருந்தே தங்களது தொழிலை நடத்த வேண்டியுள்ளது. இருப்பு கரைந்து நிதி நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2011 அறிக்கை புதிதாக அரசு மூலதனம் அதிகரிக்கும் என்பது குறித்து எதையும் பேசவில்லை. இருக்கக்கூடிய பங்குகளையாவது- அரசு மூலதனத்தையாவது குறைக்கப் போவதில்லை என்ற உத்தரவாதமும் தரப்படவில்லை.

கொள்கை அறிக்கை 2011 தொலைத்தொடர்பில் பன்மடங்கு வேலை வாய்ப்புகள் பெருகும் என பெருமை பேசுகிறது. ஆனால் நாட்டின் அனுபவம் இதை உறுதிபடுத்துவதாக இல்லை. கடந்த 10 ஆண்டுகளில் அசுர வேகத்தில் வளர்ந்த 'தொலைத்தொடர்பு தனியார்கள்' அனைவரும் சேர்ந்து கூட 1 லட்சம் இந்தியர்களுக்கு தங்கள் நிறுவனங்களில் நேரடி வேலை தரவில்லை. பொதுத்துறை நிறுவனமான பி எஸ் என் எல் 2.8 லட்சம் ஊழியருக்கும், எம் டி என் எல் 50000 ஊழியருக்கும் வேலை கொடுத்து அதிக வேலை வாய்ப்பை தந்திட்ட நிறுவனங்களாக திகழ்கின்றன. ஆனால் அங்கு 1 லட்சம் ஆட்குறைப்பிற்கு வேலைகள் நடந்து வருகின்றன. எனவே கொள்கை அறிக்கை 2011 வேலை வாய்ப்பை உருவாக்கும் என்பதை ஏற்பதற்கில்லை.

பொதுத்துறையின் பங்கு பாத்திரம் நீடிக்கும் என்ற அறிவிப்பு எவ்வாறு நடைமுறையில் காப்பற்றப்படும் என்று விளங்கவில்லை. பொதுத்துறையின் நீடித்த நிலைப்பிற்கு- நிதிஆதாரத்திற்குரிய எந்தவித கொள்கை அறிவிப்பும் இலலை.. பாரம்பரியமிக்க, பொதுத்துறைகள் மட்டுமே தந்துவரும் தரைவழி இணைப்புகளுக்கு (Landline) எந்த முக்கியத்துவமும் தரப்படவில்லை. அதன் எதிர்காலம் மாபெரும் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

நமது நாடு வெளிநாட்டு அழைப்புகளை அதிகம் இறக்குமதி செய்திடும் நாடுகளில் ஒன்று. ஏற்றுமதி இறக்குமதி விகிதம் 1:4 என்று இருக்கிறது.

இதனால் அந்நிய செலாவணி பாதிப்பும் உருவாகிறது. ஏற்ற இறக்க கட்டண விகிதங்களால் அந்நிய நாட்டு கம்பெனிகள் பெருமளவு இலாபம் சம்பாதிக்க வழியாகியுள்ளது. ஒரு நிமிடத்திற்கு சராசரியாக ரூ3 அளவில் இந்திய கம்பெனிகள் பாதிக்கபடுகின்றன. இக்கணக்கு ஆண்டிற்கு 4000 கோடியை எட்டுகிறது. இந்நிலையை மாற்றிட தேவைப்படும் நடவடிக்கை குறித்து கொள்கை அறிக்கை எதுவும் பேசவில்லை.

பொதுத்துறைகளான MTNL-ITI ஆகியவற்றை BSNL உடன் இணைப்பது என அரசு முடிவெடுத்தால் அது நோயுற்ற ஆலைகளை NTC உடன் இணைத்து நாசப்படுத்திய நிலைக்கே ஒப்பாகும். ஒரே தேசம்- ஓர் உரிமம் அடிப்படையில் BSNL, MTNL ஆகிய பொதுத்துறைகளுக்கு நாடு முழுதும் சேவை கொடுக்க உரிமம் வழங்கப்படுமா என்பது தெரிவிக்கப்படாமல் உள்ளது.

நூறு சத ஊரக இணைப்பு ஏற்படுத்துவதில் தனியார்களின் பொறுப்பு நாம் அறிந்த ஒன்றே. முழுபொறுப்பும் பொதுத்துறைகளுக்கே வந்து சேரப்போகிறது. இன்று ஊரக இணைப்பு ஒன்றிற்கு மாதந்தோறும் ரூ650 BSNLக்கு நட்டமாகி வருகிறது

கொள்கை அறிக்கை 1999, BSNL கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்ட 2000ல் அமைச்சர்குழு மற்றும் அமைச்சரவை, தொடர்ந்த ஆண்டுகளில் பல்வேறு நாடாளுமன்ற கமிட்டி அறிக்கைகளில் தரப்பட்ட உத்தரவாதங்களை 2011 அறிக்கை கவனத்தில் கொள்ளவில்லை. தொலைத்தொடர்பு கொள்கைகளால் நாடு கண்டுகொண்டிருக்கும் பகாசூர ஊழல்களை 2011 கொள்கை தடுக்கும் என்ற நம்பிக்கை தென்படவில்லை. பொதுத்துறையை வளப்படுத்தி ஜனநாயகப்படுத்துவது மூலம்தான் ஊழலை ஓரளவிற்காவது கட்டுப்படுத்தமுடியும். நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரமுடியும்.

nftem